நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 24/2025

## P.W.7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சாரதா |
| தந்தை / கணவர் பெயர் | : | செல்வராஜ் |
| கிராமம் | : | எருமப்பட்டி |
| வட்டம் | : | எடப்பாடி |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW7** |
| வயது | : | 53 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், ஜனவரி மாதம், 28–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி காணொளி காட்சி மூலம் ஆஜர் செய்யப்பட்டார். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.05 PM

1. நான் தற்போது மேட்டூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.10.2024 ம் தேதி நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் மாதேசன் என்பவர் மேட்டூர் அரசு மருத்துவமனை இண்டிமேசன் பேரில் 14.07.2024 ம் தேதி மகேஷ்வரி, க.பெ.பாண்டுரங்கன் என்பவரிடம்

பெறப்பட்ட அடிதடி வாக்குமூலத்தின் பேரில் மனு ரசீது வழங்கப்பட்டு அதனை பரிசீலனை செய்து 18.10.2024 ம் தேதி 17.00 மணிக்கு நிலைய குற்ற எண். 203/2024, ச.பி. 296(பி), 118(1), 351(2) BNS 2023 r/w 4 of TNPHW Act 2002 ல் வழக்கு பதிவு செய்து எனது புலன் விசாரணைக்கு வைத்தார்.

2. மேற்படி வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நிலையத்தில் ஆஜரில் இருந்த அவ்வழக்கின் வாதி மகேஷ்வரி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தும், அவ்வாறு ஆஜர் செய்த வழக்கின் சொத்தான சுமார் ½ கிலோ எடையுள்ள இரும்பு எடைக்கல் ஒன்றை 17.45 மணிக்கு படிவம் 91 ல் கைப்பற்றினேன். **(படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**
3. அதன்பின்னிட்டு சாட்சி மகேஷ்வரியுடன் சம்பவயிடமான மேட்டுர் அணை முனியப்பன் கோவில் அருகில் உள்ள இடத்திற்கு சென்று ஆஜர் சாட்சிகளான மாரியப்பன், செங்கோடன் ஆகியோர் முன்னிலையில் 18.15 மணிக்கு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். ( **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**
4. அதன்பின்னிட்டு மற்ற சாட்சிகளான சாட்சி ரேவதி, பாண்டுரங்கன், சுரேஷ் ஆகியோரை நிலையத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். சம்பவம் உண்மையென தெரியவந்ததால் வழக்கின் எதிரியான கார்த்திகேயன் என்பவரை தேடிவந்த நிலையில் அவர் கடந்த 14.11.2024 ம் தேதி முன்ஜாமீன் பெற்று ஜாமீனில் சென்றுவிட்டபடியால்,
5. இவ்வழக்கில் காயம்பட்ட வாதி மகேஷ்வரிக்கு மருத்துவ சிகிச்சையளித்த மேட்டுர் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு. ஞானபிரகாசம் என்பவரிடம் காயச்சான்றிதழ் பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். வழக்கு பதிவுசெய்த சிறப்பு உதவி ஆய்வாளர் மாதேசன் அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.
6. அதன்பின்னிட்டு வழக்கு சொத்திற்கு வழக்கு எண் பெற்றேன். எதிரி மீது 18.11.2024 ம் தேதி ச.பி. 296(பி), 118(1), 351(2) BNS 2023 r/w 4 of TNPHW Act 2002 ன் படி இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. 18.10.2024 ம் தேதி வழக்கு பதிவுசெய்தேன். 13.07.2024 ம் தேதி சம்பவம் நடைபெற்றது. முதல் தகவல் அறிக்கையில் மேற்படி காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். CSR.எண் 212/2024 என்ற எண்ணில் புகார் ரசீது வழங்கப்பட்டு விசாரணை நடைபெற்றதால் காலதாமதம் ஏற்பட்டது.
2. மேற்படி 13.07.2024 ம் தேதி புகார்வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டு 14.07.2024 ம் தேதி மேற்படி CSR எண்.212/2024 வழங்கப்பட்டது. மேற்படி CSR ன் பேரில் 30.09.2024 ம்தேதி விசாரணைக்கு ஆஜரானதாக தரப்பினர் எழுதிக்கொடுத்த கடிதங்கள் எனது வழக்கு கோப்பில் உள்ளது. அதற்கு முன்னால் விசாரணை நடைபெற்றது குறித்து குறிப்புகள் எதுவும் எனது வழக்கு கோப்பில் இல்லை. எனக்கு முன்பாக இந்த வழக்கில் உதவி ஆய்வாளர் மாதேசன் என்பவர் தான் CSR விசாரணை மேற்கொண்டார்.
3. மேற்படி 30.09.2024 ம் தேதி நான் சொன்ன கடிதங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். எனது வழக்கு கோப்பிலும் ஒளியச்சு நகல்கள் தான் உள்ளது. மேற்படி 30.09.2024 ம் தேதியிட்ட கடிதங்களில் விசாரணைக்கு ஆஜரானதாகவும் பேச்சுவார்த்தை முடிவுஎட்டப்படவில்லை எனவும் மறுநாள் விசாரணைக்கு ஆஜராவதாக மட்டும்தான் எழுதிக்கொடுத்துள்ளார்கள்.அந்த கடிதங்கள் எனது வழக்கிற்கு எதிராக இருக்கும் என்பதால்தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.
4. ஒரு CSR பதிவு செய்தால் 1 வாரத்தில் விசாரணை செய்து முடிவுசெய்யப்பட வேண்டும். குடும்ப பிரச்சனை என்பதால் வந்துவந்து சமாதானம் பேசிக்கொண்டு சென்றுள்ளனர். மேற்படி இந்த வழக்கில் நான் குறிப்பிட்ட ஒரு வாரக்காலத்திற்குள் CSR முடித்து வைக்கப்படவில்லை என்றால் சரிதான்.
5. குடும்ப பிரச்சனை என்பது எதிரி கார்த்திகேயனுக்கும், அவரது மனைவிக்கும் இருந்தது. அதுத்தொடர்பாகத்தான் எதிரி கார்த்திகேயனுக்கும் அவரது மாமியாருக்கும் பிரச்சனை ஏற்பட்டது. நான் சொன்னவாறு குடும்ப பிரச்சனை தொடர்பாக வந்துவந்து சமாதானம் பேசிக்கொண்டிருந்தார்கள் என்பது தவறென்றாலும் மேற்படி எதிரியின் மனைவிக்கு கடந்த 18.03.2023 ம் தேதி

எதிரியின் பெயரில் இருந்த வீட்டை அவரது மனைவிக்கு எழுதிக்கொடுத்து ஒட்டுஉறவில்லை என பிரச்சனை முடிக்கப்பட்டது என்றாலும் அதன்பின்னிட்டு இருவருக்கும் எந்த தொடர்பும் இல்லையென்றாலும் சரியல்ல.

6. அதன் பின்னிட்டு பிரச்சனை எதுவும் ஏற்படவில்லை என்றாலும், அதன் பின்னிட்டு பதிவுசெய்யப்பட்ட CSR தவறென்றாலும் அதில் குறிப்பிட்டுள்ளவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் அ.சா.1 ன் கணவர் அ.சா.2 பாண்டுரங்கன் என்பவர் தனது சாட்சியத்தில் 3 வது மாதமே பிரச்சனை முடிக்கப்பட்டதாக கூறியுள்ளார் என்றாலும் சரியல்ல. எனது விசாரணில் அவ்வாறு தெரிவிக்கவில்லை.
7. அ.சா.ஆ.1 புகாரில் குடும்ப பிரச்சனை என்று எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றாலும் எடைக்கல்லால் தாக்கியதாகவும் பொருட்களை உடைத்ததாகவும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் நான் குடும்ப பிரச்சனை என்று தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.
8. அ.சா.3 சுரேஷ் சம்பவயிடத்தில் இல்லையென்றும் சம்பவம் குறித்து தனது தந்தையார் போன் செய்ததன் மூலம் தெரிந்து கொண்டு மருத்துவமனைக்கு சென்றுதான் தனது தாயாரை பார்த்ததாகவும் சொல்லியிருந்தால் சரிதான். அ.சா.3 சுரேஷ் மருத்துவமனையில் தனது தாயாரை பார்க்கும்போது, தனது தாயாரான அ.சா.1 மகேஷ்வரிக்கு இடதுக்கையில் சிராய்ப்பு காயம் இருந்ததென்றும், முகத்தில் வீக்கம் இருந்ததென்றும் எனது விசாரணையில் சொல்லியுள்ளார். ஆனால் மேற்படி அ.சா.1 மகேஷ்வரிக்கு சிகிச்சையளித்த அ.சா.6 மருத்துவர் தனது சாட்சியத்தில் மேற்படி அ.சா.1 மகேஷ்வரிக்கு காயமோ, வீக்கமோ, கன்றிய காயமோ இருந்ததாக தான் வழங்கிய காயச்சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.
9. அ.சா.4 செங்கோடன் தனது சாட்சியத்தில் தான் சம்பவயிடத்திற்கு போகவில்லை என்றும், போலீசார் மருத்துவமனைக்கு வந்து தன்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும் கூறியுள்ளார் என்றால் அவ்வாறு சொல்லியிருந்தால் அதுதவறு. அவர்தான் சண்டையை விலக்கி விட்டதாக எனது விசாரணையில் கூறியுள்ளார்.
10. நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், உண்மையில்

அ.சா.4 செங்கோடன் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னவாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எனது வழக்கில் குறிப்பிட்டுள்ளவாறு அ.சா.1 மகேஷ்வரிக்கு தனது உயிர்நாடி பகுதியில் வலி எதுவும் இருந்ததாக மருத்துவரிடம் தெரிவிக்கவில்லை என்றாலும் கை, கால் வலி உள்ளதாகத்தான் குறிப்பிட்டுள்ளார் என்றாலும் உண்மையில் அவ்வாறு அடிப்பட்டிருந்தால் அதனால் ஏற்பட்ட வலிக்குறித்து மருத்துவரிடம் தெரிவித்திருப்பார் என்றாலும் சரியல்ல.

11. முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான் வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் நடக்காத ஒரு சம்பவத்திற்கு தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.
12. எதிரி அ.சா.1 மகேஷ்வரியின் சேலையை பிடித்து இழுத்தார் என்ற சங்கதி தொடர்பாக நான் எந்த சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்றாலும் பிணையில் வர இயலாத சட்டப்பிரிவில் எதிரியை காவல்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அவ்வாறு வழக்கு பதிவுசெய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.
13. காலதாமதமாக வழக்கு பதிவுசெய்ததில் இருந்து உண்மையில் நான் சொன்னவாறு வழக்க சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் வழக்கிற்காக சம்பவங்களை திரித்தும் சேர்த்தும் நடக்காத ஒரு சம்பவத்தை குறிப்பிட்டு காலதாமதத்தை அதற்காக பயன்படுத்திக்கொண்டு தவறாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.
14. எதிரியும் அவரது மனைவியும் நோட்டரி வழக்கறிஞர் முன்பாக முறையாக எழுதிக்கொடுத்து பிரிந்து விவாகரத்து பெற்றுக்கொள்ள இருந்த சூழ்நிலையில் அவரை பழிவாங்கும் எண்ணத்தில் அ.சா.1 மகேஷ்வரி கொடுத்த பொய்யான புகாரினை பெற்று சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் நடக்காத சம்பவத்தை குறிப்பிட்டு தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 03.50 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.